**<u>செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் 08.11.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்</u>**

**<u>மன்றப் பொருள் 01 :</u>**

அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி செங்கோட்டை நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி / காலியிட வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அலுவலக விளம்பர பலகையிலும் தினசரி நாழிதழ்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்நகர பொதுமக்களிடம் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை என்பதால், இந்நகர் பகுதியில் 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு செய்வதை ஊர்ஜிதம் செய்து மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. இந்நிலையில் இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 22 நாள் 11-04-2022ல் சொத்துவரி காலிமனை வரி பொது சீராய்வினை நிறுத்தி வைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனை உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி கோரி அரசுக்கு அனுப்பப்பட்டது.

அதனைதொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் கடிதம் எண் 9236/ந.நி4(1)/2022-2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை, நாள்-27.07.2022.ன் படி, செங்கோட்டை நகர்மன்ற தலைவருக்கு காரண விளக்கக் கடிதம் கோரப்பட்டது.

அதன்படி செங்கோட்டை நகர்மன்ற தலைவரின் கடிதம் நாள் .08.2022.ன்படி நகர்மன்ற தலைவரின் காரண விளக்கங்கள் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்: 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.03.2022-ன்படியானதை மறுபரிசீலனை செய்யக் கோரி செங்கோட்டை நகர்மன்ற தலைவர் அளித்த காரண விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 36(1) (i)-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் செங்கோட்டை நகர்மன்ற தீர்மானம் எண்.22, நாள்:11.04.2022-ஐ இரத்து செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே அரசாணை (2D) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள்.02.11.2022-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றியும் செங்கோட்டை நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்து வரி / காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளலாம் என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அரசாணை (2D) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள்.02.11.2022–ன்படி இந்நகராட்சியில் 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள இருப்பதை மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் 157 ; தீர்மானத்தை மன்றம் பதிவு செய்தது.**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி